# 8

# பகிர்ந்துகொண்ட ஒரு மனிதன்

## (2 இராஜாக்கள் 4:38-44)

*எலியா பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு ஒரு அமைதியான "உதவி செய்யும்" அற்புதத்தால் எலிசாவின் ஊழியம் துவங்கியது: எரிகோவின் மாசடைந்த தண்ணீரை நன்னீராக்கியது. அதை தொடர்ந்து, இராணுவங்களைக் காப்பாற்றியது மற்றும் ஒரு பையனை மரணத்திலிருந்து உயிர்ப்பித்தது என அதிக பிரமிக்கத்தக்கச் சம்பவங்கள் நிகழ்ந்தன. நாம் இந்த பாடத்தில், எலிசாவினுடைய ஊழியத்தின் ஒரு பகுதியாக இருந்த எளிய உதவும் அற்புதங்களுக்கு திரும்புவோம். நாம் இரண்டு அற்புதங்களைக் குறித்து சுருக்கமாய் படிப்போம். இவை இரண்டும் உணவு சம்மந்தமானவைகள். நான் அவைகளை* பகிர்ந்து கொள்ளும் *அற்புதங்கள் என நினைக்கிறேன்.*

## எலிசா பகிர்ந்து கொண்டார்

***எலிசா தனது கூழைப் பகிர்ந்துகொண்டார் (4:38-41)***

இந்த கதை "எலிசா கில்காலுக்கு திரும்பிப் போய் இருக்கையில்" என துவங்குகிறது (வசனம் 38அ). கில்கால் யோர்தான் பள்ளத்தாக்கில், எரிகோவின் அருகில் அமைந்திருந்தது (வரைபடத்தை காண்க). தீர்க்கதரிசிகளின் பள்ளி ஒன்று அங்கிருந்தது, இந்த பள்ளியானது தீர்க்கதரிசியால் தவறாமல் பார்வையிடப்பட்டிருக்கும். நமது கதையின் சமயத்தில் "தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று" (வசனம் 38ஆ). இந்த ஏழுவருட பஞ்சம் அநேகமாக 8:1ல் குறிப்பிடப்பட்ட அதே பஞ்சமாக இருக்கிறது. இந்த பஞ்சம் இஸ்ரவேலின் குடிகளை அவர்கள் விக்கிரக வழிபாட்டினிமித்தம் தண்டிக்கவும் மற்றும் மனந்திரும்பும்படி இணங்கச்செய்யவும் கர்த்தரால் வந்தது.

எலிசா இந்த பஞ்சக் காலத்தில் சூனேமியாளை வேறு ஒரு இடத்திற்கு அனுப்பியிருந்தார் (8:1, 2), ஆனால் அவரும் தீர்க்கதரிசி - பயிற்சியாளர்களும் அந்த தேசத்தில் இருந்துவிட்டார்கள். ஆபத்து காலத்தில் தன் குடும்பத்தைப் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பிவிட்டு, ஆபத்தை சந்திப்பதற்கு தான் மட்டும் அங்கேயே தங்கிவிடுகிற ஒரு தந்தையை நான் நினைவுகூருகிறேன். ஒரு தீர்க்கதரிசியின் வாழ்க்கை முறையை கடைப்பிடிக்கிறவர்களுக்கு, அவர்கள் வாழ்க்கை ஒருபோதும் சுலபமாக இருந்ததில்லை (காண்க 4:1); குறிப்பாக பஞ்சக் காலத்தில், இருமடங்கு கடினமாக இருந்திருக்கும். F. W. குருமாச்சர் என்பவர் கில்கால் பகுதி எவ்விதம் பாதிக்கப்பட்டிருந்தது மற்றும் பயிற்சியாளர்கள் எவ்விதம் இருந்திருப்பார்கள் என்பது தொடர்பாக கீழ்வரும் ஒரு வார்த்தைச் சித்திரத்தைத் தீட்டியுள்ளார்.

> அழகான தேசத்தை அடையாளங்காண்பது கடினம், அழிவு அந்த அளவுக்கு இருந்தது. ஒரு காலக்கட்டத்தில் கண்ணுக்கு எட்டுகிறவரை

*பொன்நிற வயல்களில் கதிர்கள் சாய்ந்தாடின. அறுவடையின் மிகுதியான தானியங்களை எடுத்துச் செல்லும் சுமை தாங்க முடியாத வாகனங்கள் எத்தி சையிலும் இருந்ததைப் பார்த்தோம். திராட்சை மற்றும் மாதுளங்கனிகளின் சுமை தாங்க முடியாமல், கிளைகள் கீழ்நோக்கிச் சாய்ந்திருந்தன.*

*ஆனால் இப்போதோ எவ்வளவு பெரிய மாற்றம்! வயல்கள் வெரிச்சோடிக் கிடக்கின்றன; புல்வெளிகள் சாய்ந்து வெடித்து கிடக்கின்றன; கதிர் அரிவாள் கூரை சுவரில் துருப்பிடித்து கிடக்கிறது; பெரும்பகுதியான மக்கள் பஞ்சத்தின் கொடுமையை சகித்து வருகின்றனர். எலிசா சந்தித்த தீர்க்கதரிசிகளின் புத்திரர்கூட இந்த துயரத்தை பகிந்து கொண்டார்கள்.*

*எலிசா கில்காலுக்கு வந்தபோது, அந்த சிறிய சமுதாயத்தை துக்கம் பாதித்திருந்தது, சிறிதளவே இருந்த பொருட்கள் தீர்ந்து போயிருந்தன. அவர்கள் தோட்டங்கள் வறண்டுவிட்டன, அவர்கள் பணப்பைகளும் காலியாகிவிட்டன.*[1]

கில்காலிலிருந்த மாணவர்கள் எலிசாவின் வருகையை எதிர்பார்த்தார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த முறை அவர் வந்தபோது, சீக்கிரமாக அவர்கள் அவனுக்கு முன்பாக அமர்ந்து (வசனம் 38இ), அவனுடைய ஞானமுள்ள வார்த்தைகளைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் வயிற்றுக்கு உண வில்லாமல் இருக்கலாம், ஆனால் எலிசா அவர்கள் ஆத்துமாக்களை போஷித்தார். தேவனுடைய வார்த்தைத் தொடர்பான பொதுவான போதனையுடன், அவர்கள் வாழ்க்கை எவ்வளவு கடினமானதாகப் போனாலும் கர்த்தருக்கு உண்மையாய் இருக்கும்படியும் உற்சாகப்படுத்தினான். அவர்கள் தங்கள் வாழ்க்கையை யெகோவா தேவனுக்காக அர்ப்பணம் செய்திருந்தபோதும், ஏன் பாடுபடவேண்டியிருந்தது என்ற கேள்விக்கும் அவர் அநேகமாக பதிலளித்தார்.

ஒரு சமயத்தில் எலிசா இது உணவு உட்கொள்வதற்கான நேரம் என முடிவுசெய்தார். நூற்றுக்கணக்கான வயிறுகளின் பசியால் ஏற்படும் கடகட என்ற சத்தத்தை அவர் கேட்டார் (வசனம் 43). (பசியாயிருக்கிற மனிதருக்கு போதிப்பது கடினமானது.) அநேகமாக, அது அந்த நாளின் உணவு வேளையாயிருந்தது. எலிசா, "தன் வேலைக்காரனை நோக்கி; நீ பெரிய பானையை அடுப்பிலே வைத்துத் தீர்க்கதரிசிகளின் புத்திரருக்குக் கூழ்காய்ச்சு" என்றான் (வசனம் 38ஈ). "அவருடைய வேலைக்காரன்" அவர் கில்காலுக்கு வரும்போது அவருக்கு பணிவிடை செய்ய நியமிக்கப்பட ஒரு மாணவனாக இருந்திருக்கலாம், ஆனால் அந்த வார்த்தை அநேகமாக கேயாசியை குறித்தது (வசனம் 12). அந்த "பெரிய பானை" என்பது மிகப்பெரிதான, சமூகத்திற்கான மற்றும் எல்லா நோக்கங்களுக்குமான பாத்திரமாயிருந்தது. நான் சிறுவனாயிருந்தபோது எனது அயலக சமூகத்தில் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பெரிய இரும்பு பானை இருந்தது. இந்த பானை சமையல் செய்ய; பாத்திரம் கழுவ, துணி துவைக்க, குளிக்க மற்றும் சோப்பு தயாரிக்க போதுமான சுடுநீர் தயாரிக்கவும் பயன்படுத்தப்பட்டது. பள்ளிக்கூடத்தின் "பெரிய பாத்திரம்" இது போன்ற ஒன்றாக இருந்திருக்கலாம்.

எலிசா அந்த பள்ளியின் விருந்தினராக இருந்தபடியால், வழக்கமாக மாணவர்களே அவருக்கு உணவளித்திருப்பார்கள். எலிசா உணவு தயாரிப்பதற்கான முன்முயற்சியை மேற்கொண்டது அவர் உணவின் முக்கியமான உட்பொருளை வழங்கினார் என்பதை குறிக்கிறது. அவர் ஒரு பிரபலமானவராக

*இருந்ததால், மக்கள் அவ்வப்போது அவருக்கு சில பொருட்களை கொண்டுவந்து கொடுத்தார்கள் (வசனம் 42). அவரிடத்தில் அதிகமாக இருந்திருக்காது; ஆனால் என்ன இருந்ததோ, அதை அவர் மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள விருப்பம் உடையவராக இருந்தார்.*

*கூழ்காய்ச்சுபவர்கள் சுவைக்காக, கூழைக் கெட்டியாக்க ஒரு துண்டு இறைச்சியை பொன்னிறமாக வறுத்து பின் அதோடு காய்கறிகளை சேர்ப்பார்கள். இறைச்சித் துண்டு கிடைக்காத நிலையில் முழுமையான சைவ கூழும் சுவையானதாக மற்றும் சத்தானதாக இருக்கக்கூடும். எலிசாவின் வேலைக்காரன் கூழ்காய்ச்சும் வேலையை துவங்கிய பின், ஒவ்வொரு பயிற்சியாளரும் தன்னிடமிருந்த உட்பொருட்களை உள்ளே கொட்டினார்கள் (காண்க வசனம் 39). நான் இரவு நேர வெளிப்புற முகாம்களில் இருந்திருக்கிறேன், அங்கு "கோபோ கூழ்" மாலை நேர முக்கிய உணவாக வழங்கப்பட்டது. ஒவ்வொரு நபரும் உணவை கொண்டுவந்தார்கள். அந்தப் புட்டிகளிலிருந்ததெல்லாம் ஒரு பெரிய பாத்திரத்தில் போடப்பட்டு, வெளியில் நெருப்பு மூட்டி சூடுபடுத்தப்பட்டது. நாங்கள் அதிக பசியுடையவர்களாயிருந்திருந்தால், இதனால் விளையும் உணவானது பொதுவாக உண்ணுதற்குரியதாக இருந்தது.*

*கில்காலிலிருந்த ஒரு மாணவரிடத்தில் கூழில் போடுவதற்கு எதுவும் இருக்கவில்லை, ஆகவே, "அவன் கீரைகளை பறிக்க வெளியிலே போனான்" (வசனம் 39ஆ). பல காட்டுச் செடிகள் உட்கொள்ளத்தக்கவைகளாயிருந்தன. எனது தந்தை சில சமயம் இரவு உணவில் சேர்ப்பதற்காக "கீரைகளை" கொண்டு வரும்படி அருகிலுள்ள வயலுக்கு அனுப்பியிருக்கிறார். இஸ்ரவேல் பஞ்சத்தின் பிடியில் சிக்கியிருந்ததால் (வசனம் 38), காய்கறிகள் கிடைப்பதென்பது அரிதாகவிருந்தது. அந்த மனிதன் "பேய் கொம்மட்டிக் கொடியில்" "காய்களை" கண்டபோது, அவை கூழில் சேர்ப்பதற்கு அருமையானவைகள் என நினைத்து அவன் சந்தோஷப்பட்டதை நான் கற்பனை செய்கிறேன் (வசனம் 39ஆ, இ). அவன் "அதன் காய்களை மடிநிறைய அறுத்துவந்தான்" என அந்த வசனம் கூறுகிறது (வசனம் 39இ). கோழிப்பண்ணையில் முட்டைகளைச் சேர்க்க பாட்டியம்மா தனது மேல் உடையை பயன்படுத்தியதுண்டு. அதே விதத்தில், இந்த மனிதன் தன் உடையின் கச்சையோடு கூடிய முன்பகுதியில் காய்களை நிரப்பினான்.*

*இந்த "காய்கள்" என்ன காய்களாக இருந்தன என்பது தொடர்பாக பல யூகங்கள் இருந்திருக்கின்றன, ஆனால் நமக்கு தெரிந்ததெல்லாம் அவைகள் சாவுக்கேதுவானவைகளாயிருந்தன என்பதுதான் (வசனம் 40). உலக முழுவதிலும் தீங்கற்றதாய் தோன்றுகிற, அதே சமயத்தில் விஷத்தன்மையுள்ள தாவரங்கள் உள்ளன. எனது மனத்திற்கு வருகின்ற ஒரு உதாரணம் காளான்களைப் பற்றியதாகும். நான் காளான்களை விரும்புகிறேன் - ஆனால் சிலவகை காளான்கள் உட்கொள்ளப்பட்டால் - உங்களை கொன்றுவிடக்கூடும். கதையில் உள்ள மனிதனைபோல, எனக்கு உண்ணுதற்குரிய காளான் எது, விஷத்தன்மையுள்ள காளான் எது என்று எனக்கு தெரியாது, ஆகவே உங்கள் இரவு உணவுக்கு காளான்களை சேகரிக்க என்னை காட்டுக்குள் அனுப்புவது சரியான அறிவுரையாக இருக்காது.*

*உணவு தயாரிப்பில் தனது பங்களிப்புக்கு நன்றியுள்ளவனாக, அவன் அந்த காய்களை, "அரிந்து கூழ்பானையிலே போட்டான்" (வசனம் 39இ). "அது*

இன்னதென்று அவர்களுக்கு தெரியாதிருந்தது" என அந்த வசனம் கூறுகிறது (வசனம் 39ஈ), அவர்களில் எந்த ஒரு மாணவராவது உள்ளூர் செடிகொடிகளைப் பற்றிய அறிவு உடையவராக இருந்திருந்தால், அவர் காய்களை அரிகிறவராக, கூழை கிண்டிவிடுபவராக இருந்திருக்கமாட்டார்.

கூழ் கலவை கொப்பளித்து கொதித்தபோது, அதின் வாசனை அந்த பகுதி யில் பரவியிருக்கலாம். நாக்கில் எச்சில் ஊறத் தொடங்கின. பல நாட்களில் அல்லது பல வாரங்களில், பலருக்கு இதுதான் நல்ல மற்றும் முதல் உணவாக இருந்திருக்கலாம். ஒரு வழியாக, கூழ் ஆயத்தமாகிவிட்டது. தேவனுடைய ஆசீர்வாதங்களுக்காக, அவருக்கு நன்றி செலுத்திய பிறகு,[2] "சாப்பிட அதை ஜனங்களுக்கு வார்த்தார்கள்" (வசனம் 40அ). அங்கே போஷிக்கப்பட வேண்டிய அநேகர் இருந்ததால், பொது பயன்பாட்டிற்கான நிறைய பாத்திரங்களில் பகிர்ந்து கொள்ளும்படியாக, அந்த கூழை வார்த்தார்கள். அந்த மனிதர்கள் ஆவலுடன் சிறிய ரொட்டித் துண்டை கூழில் தோய்த்து, தங்கள் வாய் அருகே கொண்டு போவதை நான் கற்பனை செய்து பார்க்கிறேன் (வசனம் 40ஆ).

அந்த அமைதியான சூழ்நிலை திடீரென சிதைந்தது. அந்த மனிதர் எலிசாவை நோக்கி, "தேவனுடைய மனுஷனே, பானையில் சாவு இருக்கிறது" என்று சத்தமிட்டார்கள் (வசனம் 40இ)! "பானையில் சாவு இருந்தது" என்பது அவர்களுக்கு எப்படி தெரிந்தது? அந்த கூழ் வித்தியாசமான வாசனை அல்லது கசப்பு சுவை உள்ளதாக இருந்திருக்கலாம். உள்ளூர் செடிகொடிகளை அறிந்தி ருந்த மாணவர்களில் ஒருவர், அந்த கூழ் கலவையில் விஷத்தன்மையுள்ள காய்கறி இருப்பதை கவனித்து இருக்கலாம். அவர்கள் யோசிக்க தொடங்கினார்கள். அவர்களில் சிலருக்கு வயிற்று குமுட்டலும், வாந்தியும் ஏற்படத் துவங்கி இருக்கலாம் அவர்கள், "சாப்பிடக் கூடாமல்" இருந்தார்கள் என வசனம் சுருக்க மாய் கூறுகிறது (வசனம் 40ஈ). இரவு உணவு பேராபத்தாக மாறிவிட்டது!

உணவு தட்டுப்பாடு இருந்த நிலையில், அவர்கள் அந்த கூழை வெளியில் கொட்டிவிட தயங்கினார்கள் - ஆனால் வேறு என்ன தான் செய்ய முடியும்? எலிசா அவர்களை நோக்கி, "மாவை கொண்டுவர"ச் (பெரிது பெரிதாக அரைக்கப்பட்ட தானிய மாவு) சொன்னான் (வசனம் 41அ). மறுபடியுமாக, தீர்க்கதரிசி பிரச்சனையை தீர்க்க மற்றவர்களை ஈடுபடுத்தினான். எலிசாவினிடத்தில் மாவு கொண்டுவரப்பட்டபோது, "அதை பானையிலே போட்டார்" (வசனம் 41ஆ). தானிய மாவை கூழில் போடுவதற்கும், கூழின் விஷத்தன்மையை முறிப்பதற்கும் என்ன சம்மந்தமிருக்கிறது? மாசடைந்த தண்ணீரில் உப்பு கொட்டப்பட்டதற்கும் அது தூய்மையடைந்ததற்கும் என்ன சம்மந்தமோ அதே சம்மந்தம்தான் (2 இராஜாக்கள் 2:19-22) - கர்த்தருடைய செயலாற்றல் தவிர - வேறு எந்த சம்மந்தமும் இல்லை. மீண்டுமாக, வல்லமை செயல்முறையில் இருக்கவில்லை, ஆனால் எலிசா தேவனோடு கொண்டிருந்த உறவில் இருந்தது.

பின்பு எலிசா, "ஜனங்கள் சாப்பிடும்படி அவர்களுக்கு வார்" என்றான் (வசனம் 41இ). சில மாணவர்கள் அந்த கிண்ணத்தை சந்தேகத்துடன் கவனிப்பதை நான் பார்க்கிறேன். பின்பு தைரியமாக ஒருவர் ஒரு ரொட்டித்துண்டை அதில் தோய்ப்பதை நான் பார்க்கிறேன்: எச்சரிக்கையுணர்வோடு, அவர் அதை தன் வாயில் போட்டார். முகத்தை சுளித்துக்கொண்டு, மெதுவாக மென்று - நிதானித்து - விழுங்கினார். பின்பு சிரித்தமுகத்துடன், "மிகவும் ருசிக்கிறது"

*என அறிவித்தார்! "அப்புறம் பானையிலே தோஷம் இல்லாமற்போயிற்று" (வசனம் 41ஈ). உடனே எல்லாரும் கூழ்கிண்ணத்தில் கை வைத்தார்கள் மற்றும் சிறிப்பொலி ஆகாயத்தை நிரப்பியது - இது எல்லாமே எலிசா தன் உணவை பகிர்ந்து கொள்ள விரும்பியதால் ஏற்பட்டதாயிருந்தது.*

***எலிசா தன் அப்பத்தைப் பகிர்ந்து கொண்டார் (4:42-44)***

*அடுத்த கதையும் அநேகமாக எலிசா கில்காலில் இருந்தபோது சம்பவித்தது, "பின்பு பாகால் சலீஷாவிலிருந்து ஒரு மனுஷன் ... வந்தான்" (வசனம் 42அ) பாகால் - சலீஷா என்பது "சலீஷா பகுதியில் இருந்த ஒரு இடமாக இருந்தது," கில்காலின் வட மேற்கு பகுதியில் அமைந்திருந்த நாடாக இருந்தது[3] (காண்க 1 சாமுவேல் 9:4). (வரைபடம் காண்க.) "ஒரு மனுஷன் தேவனுடைய மனுஷனுக்கு முதற்பலனான ... அப்பங்களை கொண்டு வந்தான்" (2 இராஜாக்கள் 4:42ஆ). "முதற்பலன்" என்பவைகள் அறுவடையிலிருந்து கிடைத்த விளைச்சல் மற்றும் கர்த்தருக்கு கொடுக்கப்பட வேண்டியதாயிருந்தது. சாதாரணமாக, முதற்பலன்கள் ஆசாரியர்களுக்கு கொண்டு செல்லப்பட்டன (லேவியராகமம் 23:10), ஆனால் இஸ்ரவேலில் உண்மையான ஆசாரியர்கள் இருக்கவில்லை. தங்களை இன்னமும் தேவனுக்கு அர்ப்பணித்திருந்தவர்கள், "எலிசாவை - தங்கள் உடன்படிக்கையின் கர்த்தருடைய - உண்மையான பிரதிநிதியாகப் பார்த்தார்கள்,"[4] இப்படியாக அந்த மனிதன் தீர்க்கதரிசிக்கு முதற்பலன்களை கொண்டுவந்தான்.*

*அந்த மனிதன், "வாற்கோதுமையின் இருபது அப்பங்களையும் தாள் கதிர்களையும் கொண்டுவந்தான்'' (2 இராஜாக்கள் 4:42ஆ). நீங்கள் "சாக்குப்பை" என வாசிக்கும்போது, பெரிய துணிப்பையை (100 பவுண்ட் உணவு தானியம் பிடிக்கக்கூடிய) நினைக்க வேண்டாம். "சாக்குப்பை" என மொழிபெயர்க்கப்பட்டிருப்பது, ஒருவர் தன் பொருட்களை எடுத்துச்செல்ல பயன்படுத்தும் (பணப்பை போன்றது) பையை குறிக்கிறது. மீண்டும் நீங்கள் "அப்பங்கள்" என்று வாசிக்கும் போது, சுடப்பட்ட ஒரு பெரிய அப்பத்தை நினைத்துக்கொள்ள வேண்டாம். மாறாக, சிறிய அப்ப உருளைகளை நினையுங்கள். மேலும் வாற்கோதுமை என்பது ஒரு சாதாரண தானியமாக இருந்தது, அப்பம் சுடுவதற்கு விரும்பப்படத்தக்க தானியமாக இருக்கவில்லை. எப்படியிருப்பினும், தேசம் பஞ்சத்தினால் பாதிக்கப்பட்டிருந்தது என்பதை மறக்க வேண்டாம். "இருபது வாற்கோதுமை அப்பங்களும் தாள் கதிர்களும்" நன்கொடையாளர் தரப்பில் ஒரு உண்மையான பலியை பிரதிநிதித்துவப் படுத்தியிருக்கும். அவைகள் அந்த மனிதனின் தேவ பக்திக்கும் மற்றும் அவன் எலிசாவின் மேல் கொண்டிருந்த மரியாதைக்கும் சாட்சியாக இருந்தது.*

*ஐந்து வாற்கோதுமை அப்பங்கள் என்பது ஒரு சிறுவனுடைய மதிய உணவுக்கு மட்டுமே போதுமானதாகவிருந்தது (காண்க யோவான் 6:9). இருபது வாற்கோதுமை அப்பங்களும் தாள் கதிர்களும் எலிசா மற்றும் அவருடைய வேலைக்காரனுக்கு இரண்டு நாட்களுக்கு மிகவும் குறைவாகவே போதுமானதாயிருந்திருக்கும். அந்த பரிசுப்பொருளை தீர்க்கதரிசி தனக்காக வைத்திருந்தால் யாரும் அவரை குற்றப்படுத்தியிருக்க மாட்டார்கள் - ஆனால் அவர் பகிர்ந்து கொடுப்பதில் நம்பிக்கையுள்ள ஒரு மனிதராக இருந்தார். தனக்கிருந்த எதையும் அவர் தன்னுடையது என கருதவில்லை (காண்க*

நடபடிகள் 4:32), மாறாக, அதை கர்த்தருடையது என நினைத்தார் (சங்கீதம் 24:1; காண்க யோவான் 3:27; 1 கொரிந்தியர் 4:7) மேலும் அவைகளை குறைவிலுள்ளவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் விரும்பினார். இப்படியாக அவர் தன் வேலைக்காரனை நோக்கி, "ஜனங்களுக்கு சாப்பிடக் (வாற்கோதுமை அப்பங்களையும் தாள் கதிர்களையும்) கொடு" என்றான் (2 இராஜாக்கள் 4:42ஈ). இங்கே "ஜனங்கள்" என குறிப்பிடப்படுபவர்கள் அநேகமாக முந்தைய சம்பவத்தில் எலிசாவால் போஷிக்கப்பட்ட பயிற்சி - தீர்க்கதரிசிகளாய் இருந்தார்கள்.

வேலைக்காரன் சந்தேகப்பட்டான். அதற்கு அவனுடைய பணிவிடைக்காரன்: "இதை நான் நூறுபேருக்கு முன் வைப்பது எப்படி?" என்றான் (வசனம் 43அ). அந்த "பணிவிடைக்காரன்" அநேகமாக கேயாசியாக இருந்தான்; வார்த்தைகள் அந்த மனிதனுடைய உலகக் கண்ணோட்டத்திற்கு பொருந்துகிறது (காண்க 5:20-27). இந்த வேலைக்காரன் நடந்த கொண்டவிதம், இயேசு கொஞ்சம் உணவைக் கொண்டு ஆயிரக்கணக்கானவர்களை போஷிப்பதற்கு முன்பு அவருடைய சீஷர்கள் கூறியதை நமக்கு நினைவுபடுத்துகிறது (காண்க மத்தேயு 14:17; மாற்கு 6:37; யோவான் 6:8, 9).

கேயாசியின் கண்ணோட்டம் புரிந்து கொள்வதற்கு எளிதானது. பசியோடிருக்கும் நூறு மனிதருக்கு முன்பாக ஒரு இருபது சிறிய அப்பத்துண்டுகளை வைப்பது, அவர்களுடைய வயிற்றை நிரப்புவதற்கு பதிலாக அதிக ஏமாற்றத்தை கொடுக்கிறதாக இருக்கும்; ஒவ்வொருவருக்கும் ஒரு சிறிய துண்டுதான் கிடைக்கும். ஒவ்வொருவரும் ஒரு முறை மட்டும் விழுங்குவதற்குரியதைப் பெற்றிருப்பார்கள். பின் உணவு தீர்ந்து போயிருக்கும். வேறு ஒரு எண்ணமும் வேலைக்காரன் மனதில் இருந்திருக்கலாம். "நாம் நமது உணவை பிறருக்கு கொடுத்துவிட்டால், *நாம்* எதை சாப்பிடுவோம்?" எப்படியிருந்தாலும், கேயாசியின் வேலை, கேள்வி கேட்பதல்ல, மாறாக கீழ்ப்படிவதாக இருந்தது. ஒரு விதவையின் எண்ணெய்யை வர்த்திக்கச் செய்ய (4:1-7), மற்றும் ஒரு இராணுவத்திற்கு தண்ணீர் விநியோகம் செய்ய (2 இராஜாக்கள் 3:9-20) தேவன் பயன்படுத்தின ஒரு மனிதருக்கு ஊழியம் செய்கிறோம் என்பதை அவர் மறந்துவிட்டாரா?

"இருபது சிறிய அப்பத்துண்டுகளை கொண்டு நூறு மனிதர்களைப் போஷிக்க என்னால் முடியாது, ஆகவே இது செய்யப்பட முடியாது!" என்று கேயாசி சிந்தித்திருக்கலாம். இப்படி சிந்திப்பது பொதுவானதுதான், ஆனால் அதில் ஒரு பெலவீனம் இருக்கிறது. யாரோ ஒருவர் நான் ஒரு நாளில் இத்தனை மைல்கள் பயணம் செய்ய வேண்டுமென என்னிடம் கூறுவதாக வைத்துக்கொள்வோம். நான் என் தலையை அசைத்துக்கொண்டு, "ஒரு நாள் முழுவதும் ஓடினாலும், இரவுக்கு முன்பாக அந்த தொலைவை என்னால் எட்டமுடியாது!" என கூறுகிறேன். ஆனால் எனக்கு அறிவுரை கூறிய மனிதர், "நீங்கள் இதை உங்கள் சொந்த பெலத்தால் செய்ய வேண்டியதில்லை! நீங்கள் பயணம் செய்வதற்கான ஒரு வசதியை உங்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கிறேன்!" என பதிலளிக்கிறார். நான் கால் நடையாக ஒரு நாளில் எவ்வளவு தொலைவு பிரயாணம் செய்ய முடியும் என்பதில் சில அளவீடுகள் இருப்பது உண்மைதான் - ஆனால் எனக்கு ஒரு குதிரை அல்லது சரக்கு வண்டி அல்லது ஒரு வாகனத்தை கொடுங்கள், சூழ்நிலை வலிமையாக மாறிவிடுகிறது. கேயாசியைப்போல், பலர் *தேவனுடைய*

*உதவியால்* தங்களால் என்ன சாதிக்கக்கூடும் என்பதை பரிசீலிக்காமல், *தங்களால்* என்ன செய்யக்கூடும் என்பதை மட்டும் பரிசீலிக்கிறார்கள்.

"அதை ஜனங்களுக்கு சாப்பிடக் கொடு" என வேலைக்காரனுக்கு திரும்ப கட்டளையிட வேண்டியதாயிருந்ததில் எலிசா கொஞ்சம் எரிச்சலடைந்தாரா என சிந்திக்கிறேன் (வசனம் 43ஆ). "சாப்பிட்டபிற்பாடு இன்னும் மீதியுண்டாயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்றும் தீர்க்கதரிசி கூடுதலாகக் கூறினார் (வசனம் 43இ). "கர்த்தர் சொல்லுகிறார், இதில் தேவன் ஈடுபடுகிறார் என்பதையும் மற்றும் தேவனாலே எல்லாம் கூடும்" என்பதையும் நாம் அறிந்து கொள்ளச் செய்கிறது (மத்தேயு 19:26). "இன்னும் மீதி உண்டாயிருக்கும்" என்பது ஒவ்வொருவரும் சாப்பிடமுடியும் என்பது மட்டுமல்ல, ஒவ்வொருவரும் திருப்தியாக சாப்பிடமுடியும் எனவும் பொருள்படுகிறது.

கேயாசி "அவர்களுக்கு [நூறு மனிதர்கள்] முன்பாக அதை [வாற்கோதுமை அப்பம் மற்றும் தாள் கதிர்] வைத்தான்" (வசனம் 44அ). அப்போது அவன் முறுமுறுத்தானா என நான் சிந்திக்கிறேன். "முணுமுணுத்தல், முணுமுணுத்தல் ... இது அர்த்தமற்றது! ... முணுமுணுத்தல், முணுமுணுத்தல் ... நான் செய்த அறிவில்லாத செயல் ... முணுமுணுத்தல், முணுமுணுத்தல்." வேலைக்காரணுக்கு விசுவாச குறைவு இருந்தபோதிலும், கூட்டத்திலிருந்தவர்கள் தங்களுக்கு வேண்டியமட்டும் சாப்பிட்டார்கள், கர்த்தர் முன் உரைத்தபடியே - உணவு இன்னும் எஞ்சியிருந்தது (வசனம் 44ஆ). இயேசுவானவர் ஒரு சில அப்பங்கள் மற்றும் மீன்களைக் கொண்டு திரளானவர்களை போஷித்த அந்த தருணங்கள் நமக்கு மீண்டும் நினைவுபடுத்தப்படுகின்றன (மத்தேயு 14:20; 15:37).

இந்த அற்புதம் எப்படி நிகழ்ந்தது என்று வசனப்பகுதி நமக்கு எதுவும் சொல்வதில்லை. வார்க்க வார்க்கக் குறையாத குடத்திற்குப் பதிலாக (2 இராஜாக்கள் 4:1-6), எடுக்க, எடுக்க, குறையாத சாக்கு பையிலிருந்து கேயாசி உணவை எடுத்துக் கொண்டிருந்தான். இருப்பினும் இது நடந்தது, அவனும் மற்றவர்களும் (உணவு உண்ட நூறு பேரும்) முடிவு இல்லாமல் தொடர்ந்து உணவு அளிப்பு இருந்து கொண்டிருந்ததைப் பார்த்து மேலும் மேலும் வியப்படைந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா?

இவ்விதமாக, தேவன் தம்மை விசுவாசிப்பவர்களுக்கு தம்முடைய கரிசனை மற்றும் பாதுகாப்பை விளங்கப்பண்ணுகிறார் (காண்க மத்தேயு 6:33). இந்த சந்தர்ப்பத்தில், அவர் எலிசாவின் தாராளமனமுள்ள பகிர்வின் மூலம் அதை செய்தார். எலிசா தன்னிடத்தில் அதிகமாக இருந்தாலும் சரி, மிக குறைவாக இருந்தாலும் சரி, தன்னிடத்திலிருந்ததை பிறரோடு பகிர்ந்துகொள்ளத் தயங்காத ஒரு மனிதராக இருந்தார்.

## நாம் பகிர்ந்துகொள்ள வேண்டும்

நமது வசனப்பகுதியை கவனிக்கையில், பல செயல் விளக்கங்கள் மனதில் வருகின்றன. உதாரணமாக, தேவன் கிருபையால் அவருடையவர்களுக்கு அருளும் அவரது அளிப்புகளில் நாம் கவனம் செலுத்தக்கூடும். பயிற்சி - தீர்க்கதரிசிகள் அந்த கூழை குடித்தபின், அடுத்த வேளை உணவு எங்கிருந்து வரும் என அவர்கள் ஆச்சரியப்பட்டிருக்கலாம். அப்போது கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது மற்றும் ஒரு மனிதர் சாக்கு பையில் வாற்கோதுமை அப்பங்களையும் மற்றும் தானியத்தையும் வைத்துக்கொண்டு நின்றார்! ஆண்டுகளாக, பல

கிறிஸ்தவர்கள் எதிர்பாராத இடத்திலிருந்து உதவி வந்த வரையிலும், இந்த நெருக்கடியை அல்லது அந்த நெருக்கடியை நாம் எப்படி சமாளிக்கபோகிறோம் என்று தவித்துக்கொண்டிருந்தார்கள். "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" (ரோமர் 8:32).

மேலும், நம்மை சூழ்ந்துள்ள மறைவான அபாயங்களைப் பற்றி பேசுவதற்கு நாம் "பானையில் சாவு இருக்கிறது" என்ற சொற்றொடரை இரவல் வாங்க தூண்டப்படுவோம். ஒரு சிலருக்கு "தீங்கற்றதாய்" தோன்றுகிற காரியங்களில் "பயங்கரமான ஆபத்துகள்" ஒழிந்துள்ளன:

- பல சினிமா படங்கள் மற்றும் தொலைகாட்சி நிகழ்ச்சிகள், சில புத்தகங்கள் மற்றும் இசை நாடாக்கள்.
- புகைத்தல், குடித்தல் மற்றும் சட்ட விரோதமான போதை பொருட்களை பயன்படுத்துதல்.
- பொருளாசை மற்றும் பொதுவான உலகபிரகாரமான வாழ்க்கை முறை.
- ஆவிக்குரிய அறியாமை மற்றும் ஆவிக்குரிய தவறுகள்.

ஆம், நாம் படித்த வசனப்பகுதிகளிலிருந்து பல செயல்விளக்கங்களை எடுத்துக்கொள்ளமுடியும் - ஆனால் நான் நாம் பின்பற்ற வேண்டிய எலிசாவின் தாராள குணத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

**பகிர்ந்து கொள்ளுதலின் முக்கியத்துவம்**

பகிர்ந்து கொள்ளுதல் கற்றுக்கொள்வதற்கு ஒரு சுலபமான பாடம் அல்ல. எனது மூத்த மகள் சிண்டி, மூன்று வயதானவளாயிருந்த போது, அவளுடைய வேத வகுப்பு ஆசிரியர் பகிர்ந்து கொள்ளுதல் பற்றிய ஒரு பாடத்தை போதித்துள்ளார். இந்த பாடத்தை கைக்கொள்வதற்கு ஏதுவாக, வகுப்பில் இருந்த பிள்ளைகள் தங்கள் பொம்மைகளை ஒருவரோடொருவர் பகிர்ந்து கொள்ளும் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. சிண்டி, அருகிலிருந்த சிறு பெண்பிள்ளையிடம் நடந்து சென்று, அவள் கையிலிருந்த பொம்மையைப் பறித்துக் கொண்டு, அவள் சிறிய காலை மிதித்து கொண்டு, "*என்னோடு* பகிர்ந்து கொள்!" என்று கூறினாள்.

பகிர்ந்து கொள்ளுதல் எப்போதும் நமக்கு விருப்பமான பயிற்சியாக இல்லாதிருப்பினும் - கர்த்தர் தமது கட்டளையாலும் முன் உதாரணத்தினாலும் அதை செய்யும்படி கூறுகிறார். யோவான் ஸ்நானகன் தம்மை பின்பற்றுவோரை நோக்கி, "இரண்டு அங்கிகளையுடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கக்கடவன்; ஆகாரத்தை உடையவனும் அப்படியே செய்யக்கடவன்" என்றான் (லூக்கா 3:11). எருசலேமில் இருந்த கிறிஸ்தவர்கள், "காணியாட்சிகளையும் ஆஸ்தி களையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்" (நடபடிகள் 2:45). பவுல் உணவு தேவனால் படைக்கப்பட்டதென்று கூறுகிறார். "விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அநுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்கள் ..." (1 தீமோத்தேயு 4:3). "நன்மை

செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களாயிருக்கவும்'' தீமோத்தேயு போதிக்க வேண்டியவராயிருந்தார் (1 தீமோத்தேயு 6:18). எபிரெயர் நிருபத்தின் ஆசிரியர், "அன்றியும், நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்'' என போதித்தார் (எபிரெயர் 13:16அ).

பிறரோடு பகிர்ந்து கொள்வது தொடர்பாக பல வசனப்பகுதிகள் போதிக்கின்றன:

> ஆகையால், நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம் (கலாத்தியர் 6:10).

> திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிரயாசப்படக்கடவன் (எபேசியர் 4:28).

> ஒரு சகோதரனாவது, சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அனுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர் காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? (யாக்கோபு 2:15, 16).

பகிர்ந்து கொள்ளுதல் பல சந்தர்ப்பங்களை நமக்கு கொண்டுவருகின்றன:

- சகலமும் தேவனுக்கு சொந்தமானதெனவும், நாம் பெற்றிருப்பவைகளுக்கு நாம் உக்கிராணக்காரராக மட்டும் இருக்கிறோம் என்பதை புரிந்துகொள்ளும் சந்தர்ப்பம் உண்டாகியிருக்கிறது.
- எல்லாவற்றையும் நம்மோடு பகிர்ந்து கொள்கிற தமது மிகவும் விலையேறப்பெற்ற ''பொக்கிஷமாகிய'' தமது குமாரர் இயேசு கிறிஸ்துவையே நம்மோடு பகிர்ந்துகொண்ட தேவனைப் போல மாறுவதற்குறிய சந்தர்ப்பம் நமக்கு கிடைக்கிறது.
- நமது அன்பை நடைமுறையில் மற்றவர்களுக்கு தெரிவிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கிறது.
- மற்றவர்களை சந்தோஷப்படுத்துகிற சந்தர்ப்பம் நமக்கு கிடைக்கிறது.
- சுயநலத்திற்கெதிரான வாழ்நாள் போராட்டத்தில் முன்னேறுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கிறது. பகிர்ந்து கொள்வது நம்மில் பலருக்கு கடினமாயிருப்பதற்கு காரணம் என்னவெனில், நாம் சுயத்தை மையமாகக் கொண்டு செயல்படுவதுதான். "நாம் கடினமாக உழைத்து இவைகளை பெற்றுள்ளோம், இது நமக்குரியது, இதை நாம் ஏன் வெளியில் கொடுக்க வேண்டும்?'' என்பது நமது கேள்வியாகவுள்ளது. நாம் மற்றவர்களை ஆசீர்வதிக்கத்தக்கதாக, தேவன் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் என்பதை நாம் உணர்ந்து கொள்ள தேவன் நமக்கு உதவி செய்வாராக.

"சிலர் வாழ்க்கையின் தேவைகளுக்காக முயற்சி கூட செய்வது இல்லை:

பிறரின் உதவியால் வாழ்வதில் அவர்கள் திருப்தியடைகிறார்கள். நிச்சயமாக, அப்படிப்பட்டவர்களோடு பகிர்ந்து கொள்ள நாம் கடமைப்பட்டவர்கள் அல்ல. என சில ஆட்சேபனைகள் எழுப்பக்கூடும்!'' இல்லை, நாம் உதவி செய்யவேண்டியதில்லை. "ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால், அவன் சாப்பிடவும் கூடாது ..." என பவுல் போதிக்கிறார் (2 தெசலோனிக்கேயர் 3:10அ). எப்படியிருப்பினும், மற்றவர்களுடைய சூழ்நிலையை குறித்து நாம் நிச்சயமாக அறிந்திருப்பது சாத்தியமல்ல. மற்றவர்களை குறித்து தீர்ப்பு செய்வதில் நாம் குற்றவாளிகளாக மாறாதபடி ஜாக்கிரதையாய் இருக்கக்கடவோம். நாம் தவறுவோமானால், நன்மை செய்கிற பகுதியில் தவறுவோமாக.

**பகிர்ந்து கொள்ளுதலின் ஆசீர்வாதங்கள்**

இதை கருத்தாய் சிந்தியுங்கள்: எலிசா பகிர்ந்து கொண்டதற்காக உபத்திரவப்பட்டாரா? அவர் அடுத்த வேளை உணவின்றி இருந்தாரா? அவர் பட்டினியோடிருந்தாரா? இல்லை. தேவன் அவருக்கு தேவையானவைகளை தந்து ஆசீர்வதித்தார் - மேலும் தன்னால் மற்றவர்களுக்கு எந்த காரியங்களிலெல்லாம் உதவி செய்ய முடிந்தது என்பதை அறிந்து அவர் மனநிறைவடைந்தார்.

உதாரத்துவமாய் பகிர்ந்து கொள்கிறவர்கள் ஒரு ஆச்சரியமான சத்தியத்தை கண்டுபிடித்திருக்கிறார்கள்: பகிர்ந்து கொள்வதால் நாம் நஷ்டமடைவதில்லை. நாம் பகிர்ந்து கொள்கிற சில காரியங்களில் இதை தெளிவாய் அறிந்திருக்கிறோம். நாம் நமது மகிழ்ச்சியை பகிந்து கொண்டால், நமது மகிழ்ச்சி அதிகமாய் பெருகுகிறது, ஆனால் அது குறைவதில்லை. நாம் நமது கருத்துக்களை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டால் அதிக கருத்துக்களை உடையவர்களாக மாறுகிறோம். அவைகள் குறைந்துபோவதில்லை. எனது நண்பர் ஒருவர் ரோஜா மலர்கள் விஷயத்திலும் இந்த கொள்கை உண்மையாக இருப்பதாக என்னிடம் கூறியுள்ளார். அவர் ஒரு ஆண்டின் துவக்கத்தில் பூக்கும் ரோஜா மலர்களை வெட்டி எடுத்து மற்றவர்களோடு பகிர்ந்து கொள்கிறார். இவ்விதமாக ரோஜா புதர் அந்த பருவகாலம் முழுவதும் ரோஜா மலர்களைக் கொடுக்கத்தக்கதாக தூண்டப்பட்டிருந்தது என கூறினார்.

நாம் பகிர்ந்து கொள்கிற மற்ற காரியங்களில், உதாரணமாக பணம் மற்றும் உடமைகள் ஆகியவற்றை பகிர்ந்து கொள்வதில் இந்த கொள்கை அவ்வளவு தெளிவாக தெரியாதிருக்கலாம். இருப்பினும், நமது கர்த்தர் அது உண்மையாயிருக்கிறது என்பதை உறுதி செய்கிறார். "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும் ... நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்" என நமது ஆண்டவர் இயேசு போதித்தார் (லூக்கா 6:38). மறுபடியுமாக அவர், "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" என போதித்தார் (நடபடிகள் 20:35).

> "பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும்

*பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்" என பவுல் எழுதினார் (2 கொரிந்தியர் 9:6-8).*

## முடிவுரை

*பகிர்ந்து கொள்வதை நாம் ஒரு பழக்கமாக மாற்ற வேண்டுமென்றும், நமக்குள்ளதை பகிர்ந்து கொள்ள எலியாவின் முன்மாதிரியினால் நாம் ஏவப்படவேண்டுமென்றும் நான் ஜெபிக்கிறேன். "ஒவ்வொரு நாளிலும் சிறிதளவாவது பகிர்ந்து கொள்வதே, அதிக அளவில் பகிர்ந்து கொள்வதற்கான வழியாயிருக்கிறது" என யாரோ ஒருவர் கூறியுள்ளார்.*[5]

*சுவிசேஷம் - இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி - இது தான் நாம் பகிர்ந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான செய்தியாயிருக்கிறது. நாம் பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுவதற்கும் மற்றும் சாவுக்கேதுவான கூழ் உணவுக்கும் சில ஒப்பீடுகளை சிலர் காண்கின்றனர்:*

- *கொம்மட்டிக் காய்கள் பானையில் சாவைக் கொண்டு வந்ததுபோல - பாவம் நம் வாழ்வில் பிரவேசிக்கும் போது, அது ஆவிக்குரிய மரணத்தை கொண்டுவருகிறது.*
- *தீர்க்கதரிசிகளின் புத்திரர் எதுவும் செய்யக் கூடாமல், வேதனையில் கதறியது போல, நாமாகவே நமது சூழ்நிலையை மாற்றியமைக்க இயலாதவர்களாக இருக்கிறோம்.*
- *அந்த கூழ் உணவின் விஷத் தன்மை நீக்கப்பட்டது போல, அவரிடத்தில் திரும்புகிறவர்களின் பாவங்களை இயேசுவின் இரத்தம் நீக்கி சுத்தி கரிப்பதற்காக, தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.*
- *உணவைக் கொண்டு வருவதில் எலிசா, மாணவர்களை ஈடுபடுத்தியது போல, நமது இரட்சிப்பில் நாம் ஒரு பகுதியை உடையவர்களாயிருக்க தேவன் அனுமதிக்கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை நாம் விசுவாசிக்கவேண்டும் (யோவான் 3:16), நாம் நமது பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும் (லூக்கா 13:3), கிறிஸ்துவில் நமது விசுவாசத்தை அறிக்கை செய்யவேண்டும் (மத்தேயு 10:32), கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பண்ணப்படவேண்டும் (மாற்கு 16:16), மற்றும் "முடிவுபரியந்தம்" உண்மையாய் வாழவேண்டும் என கர்த்தர் எதிர்பார்க்கிறார் (மத்தேயு 10:22).*

*தான் பகிர்ந்து கொண்டதிலிருந்து மற்றவர்கள் பயனடைந்ததை பார்த்து, எலிசா புன்முறுவல் பூத்திருக்க வேண்டும். அதேபோல் நான் சுவிசேஷத்தை உங்களோடு பகிர்ந்துகொள்வதால், உங்கள் வாழ்க்கை ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவதைக்காட்டிலும் வேறு எதுவும் என்னை அதிக மகிழ்ச்சியுள்ளவனாக்காது.*

---

*குறிப்புகள்*

[1]Adapted from F. W. Krummacher, *Elisha, a Prophet for Our Times* (Grand Rapids, Mich.: Kregel Publications, 1993), 71. [2]இது குறிப்பிடப்படவில்லை, ஆனால் இப்படிப்பட்ட ஒரு

ஜெபத்தை ஏறெடுத்தல், அந்த சமூகத்தின் வழக்கமான ஜெபமுறையாக இருந்திருக்கலாம்.
[3]C. F. Keil and F. Delitzsch, “1 and 2 Kings,” *Commentary on the Old Testament,* vol. 3, *1 and 2 Kings, 1 and 2 Chronicles, Ezra, Nehemiah, Esther* (Peabody, Mass.: Hendriksen Publishers, 1989), 315. [4]J. Robert Vannoy, notes on 2 Kings, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 531. [5]Eleanor Doan, comp., *Speakers Sourcebook* (Grand Rapids, Mich.: Ministry Resources Library, Zondervan Publishing House, 1960), 224.